**ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL (AUAB)**

**No.UA/2019/67** **25.01.2019**

**சுற்றறிக்கை**

# 25.01.2019 அன்று நடைபெற்ற AUAB கூட்டம்

25.01.2019 அன்று காலை 11 மணிக்கு NFTE சங்க அலுவலகத்தில் நடைபெற்ற AUAB கூட்டத்திற்கு அதன் தலைவர் தோழர் சந்தேஸ்வர் சிங் தலைமை தாங்கினார். AUAB அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு வந்திருந்த அனைவரையும் வரவேற்று ஆய்படு பொருட்களை அறிமுகம் செய்து உரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் தோழர் P.அபிமன்யு GS (BSNLEU), தோழர் சந்தேஸ்வர் சிங் GS மற்றும் தோழர் இஸ்லாம் அகமது, தலைவர்(NFTE), தோழர் செபாஸ்டின் GS, தோழர் A.A.கான் PRESIDENT(SNEA), தோழர் பிரகலாத் ராய் GS, தோழர் சிவகுமார் PRESIDENT(AIBSNLEA), தோழர் ரவி ஷில் வர்மா GS, தோழர் பத்ரி VP(AIGETOA), தோழர் சுரேஷ் குமார் GS(BSNL MS), தோழர் ரேவதி பிரசாத் AGS (BSNL ATM) மற்றும் தோழர் H.P.சிங் Dy.GS(BSNL OA) ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் AUAB முன்வைத்த கோரிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. 3வது ஊதிய மாற்ற பிரச்சனையில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லையென்பதை இந்தக் கூட்டம் முடிவுக்கு வந்தது. நிதி ஆயோக்கும் செலவினங்களுக்கான இலாகா(DoE)யும் 4G அலைக்கற்றை ஒதுக்கீடு பிரச்சனையிலும் முட்டுக் கட்டை போட்டுள்ளன என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டது. ஓய்வூதிய மாற்றத்தை ஊதிய மாற்றத்தில் இருந்து பிரித்து பார்ப்பது என்கின்ற மத்திய தொலை தொடர்பு அமைச்சர் உறுதிமொழி கொடுத்த போதும், தொலை தொடர்பு துறை அதில் தடைக்கற்களை போடுகின்றது.

BSNLல் நிலவி வரும் கடுமையான சூழ்நிலைகளையும், பொருளாதார நெருக்கடிகளையும் இந்த AUAB கூட்டம் அக்கறையுடன் பரிசீலித்தது. BSNL நிறுவனம் வங்கிகளில் இருந்து கடன் பெறுவதற்கு வேண்டும் வேண்டுமென்றே தொலை தொடர்பு துறை தடைகளை ஏற்படுத்துகிறது. இதனால் மின்கட்டணம், வாடகை, ஒப்பந்த ஊழியர்களின் ஊதியம் உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு மாநிலங்களுக்கு தேவையான நிதி ஒதுக்க BSNL நிர்வாகத்தால் இயலவில்லை. இதன் காரணமாக BSNLன் வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் தாமதப்படுவதால் நிறுவனத்தின் வளர்ச்சி கடுமையாக பாதிக்கிறது. ஊழியர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட GPF, EPF, வங்கி தவணை, சொசைட்டி தொகை உள்ளிட்டவை அந்தந்த நிறுவனங்களுக்கு செலுத்தப் படாததால் ஊழியர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

BSNLன் புத்தாக்கத்திற்கான அனைத்து வழிகளையும் தொலை தொடர்பு துறை அடைக்கின்றது. இதர நிறுவனங்களோடு போட்டி போட தேவையான BSNLன் வளர்ச்சிக்கு அரசாங்கம் எந்த வகையிலும் உதவ மறுக்கின்றது. BSNLவசம் உள்ள காலியிடங்களை திறம்பட பயன்படுத்த/குத்தகைக்கு விடும் திட்டத்தோடு கூடிய ’நில மேலாண்மை கொள்கை’யை BSNL நிர்வாகம், தொலைதொடர்பு துறையின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது. இந்தக் கொள்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டால், காலியிடங்களை வாடகைக்கு/குத்தகைக்கு விடும்போது, BSNL நிறுவனத்திற்கு வருடத்திற்கு குறைந்த பட்சம் 7000 கோடி ரூபாய் முதல் 10,000 கோடி ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். வேண்டும் வேண்டுமென்றே, தொலை தொடர்பு துறை இந்த திட்டத்திற்கும் தடை விதிக்கின்றது.

BSNL மொபைல் டவர்களின் பராமரிப்பை, நிர்வாகம் அதிகப்படியான விலைக்கு OUTSOURCING செய்ய திட்டமிட்டுள்ளது. இதன் காரணமாக வருடா வருடம் அதிகப்படியான தொகையை செலுத்த வேண்டி இருக்கும். துவக்கத்திலேயே இந்த திட்டத்தை AUAB எதிர்த்தது. ஆனால் நிர்வாகம் இந்த திட்டத்தை செயல்படுத்த முடிவெடுத்துள்ளது. குறிப்பாக இந்த நிறுவனம் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கும் இந்த வேலையில், நாடுமுழுவதும் BSNL ஊழியர்களே, மொபைல் டவர்களை சிறப்பாக பராமரித்து வரும் நிலையில் இவ்வளவு பெரிய தொகையை BSNL நிறுவனம் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை.

மேலே சொல்லப்பட்ட அனைத்து விஷயங்களையும் விரிவாக விவாதித்த AUAB கூட்டம், இதுதான் போராட்டத்தை மீண்டும் துவக்க அவசியமான தருணம் என்ற முடிவுக்கு வந்தது. BSNLன் புத்தாக்கத்திற்கான மிக மிக அவசியமான சில புதிய கோரிக்கைகளையும் நமது கோரிக்கை மனுவில் இணைக்க வேண்டும் என ஏகமனதாக முடிவு செய்தது. இந்தக் கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

### முடிவுகள்

1) **பல்வேறு எதார்த்த நிலைமைகளை கணக்கில் கொண்டு, BSNLல் உள்ள அதிகாரிகளும், ஊழியர்களும் 18.02.2019 முதல் 3 நாட்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட AUAB அறைகூவல் விடுக்கின்றது.**

2) நமது போரட்ட கோரிக்கைகளின் மீது பொதுமக்களின் ஆதரவை திரட்டும் வகையில் 11.02.2019 முதல் 5 நாட்கள் தெருமுனை பிரச்சாரம் செய்வது.

3) மாநில/மாவட்ட மட்டங்களில் பிப்ரவரி 12/13 தேதிகளில் பத்திரிக்கையாளர் சந்திப்புகளை நடத்துவது.

4) BSNLஇன் புத்தாக்கம் உள்ளிட்ட நமது கோரிக்கைகளின் மீது அனைத்து அரசியல் கட்சிகளையும் சந்தித்து ஆதரவை திரட்டுவது.

### கோரிக்கைகள்:-

**1) 15%ஊதிய நிர்ணய பலனுடன் 3வது ஊதிய மாற்றத்தை அமலாக்கு!**

**2) BSNL நிர்வாகத்தின் முன்மொழிவின்படி BSNLக்கு 4G அலைக்கற்றையை ஒதுக்கீடு செய்!**

**3) 01.01.2017 முதல் BSNL ஓய்வூதியதாரருக்கு ஓய்வூதிய மாற்றத்தை அமல்படுத்து!**

**4) அரசு விதிகளின் படி மட்டுமே BSNL நிறுவனத்திடமிருந்து ஓய்வூதிய பங்களிப்பை பெற வேண்டும்!**

**5) 2வது ஊதிய மாற்றக்குழுவின் விடுபட்ட பரிந்துரைகளை அமலாக்கு!**

**6)அ) BSNLஇன் நில மேலாண்மை கொள்கைக்கு விரைவில் ஒப்புதல் வழங்கு!**

**ஆ) BSNL உருவாகும் முன் மத்திய அமைச்சரவை எடுத்த முடிவின் படி BSNLக்கு அதன் சொத்துக்களை மாற்றிக்கொடுக்கும் செயலை விரைவு படுத்தி முடித்துக்கொடு!**

**7) BSNL உருவாகும் போது அமைச்சர்களின் குழு எடுத்த முடிவின்படி BSNLஇன் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த BSNLக்கு தேவையான பொருளாதார உதவிகளை வழங்கு! வங்கி கடன்களை பெறுவதற்கு தேவையான 'Letter of comfort'ஐ உடனே வழங்கு!**

**8) BSNLமொபைல் டவர்களை பராமரிக்க முன்மொழியப்பட்டுள்ள 'Outsourcing'ஐ கைவிடு!**

நன்றி

தோழமையுள்ள,

ஒப்பம்
**தோழர் சந்தேஸ்வர் சிங்**
**AUAB தலைவர்**

ஒப்பம்
**தோழர் P.அபிமன்யு**
**AUAB ஒருங்கிணைப்பாளர்**